**Crl.M.P.No.181/2025**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2026**

**சாட்சி –2**

**பெயர் – ரபேக்கா (46) க/பெ. முனுசாமி கீழ்பாப்பம்பாடி**

1. புகார்தாரர் அன்னமேரி என்பவரை தெரியும் அவர் திருவம்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறார். கடந்த 28.01.2025 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் புஷ்பராஜ், அருண் ஆகியோர்கள் புகார்தாரர் மற்றும் அவர்களுக்கு சொந்தமான இடத்திற்கு நடுவில் உள்ள மரம் மற்றும் மண் ஆகியவற்றை JCB வைத்து அப்புறப்படுத்திவிட்டார்கள். அதனை புகார்தாரர் மறுநாள் காலை சுமார் 08.00 மணியளவில் மேற்படி மரம் மற்றும் மண்ணை அப்புறப்டுத்திய இடத்தில் வைத்து அருன் மற்றும் புஷ்பராஜ் ஆகியோர்களிடம் ஏன் இவ்வாறு பள்ளம் எடுத்துள்ளீர்கள் அதனை செய்வதற்கு முன்பு என்னிடம் கேட்க கூடாதா என்று கேட்டார். அதற்கு அருன் மற்றும் புஷ்பராஜ் ஆகியோர்கள் புகார்தாரரை பார்த்து ஆபாசமான வார்த்தைகளால் திட்டி இங்கிருந்து சென்றுவிடு இல்லை எனில் உன்னை வெட்டி புதைத்துவிடுவோம் என கத்தி மற்றும் கடப்பாரை ஆகியவற்றை காண்பித்து மிரட்டினார்கள். இதனை நான் பார்த்து புகார்தாரை அங்கிருந்து அழைத்து வந்துவிட்டேன்.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.